**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 110 /2022 PW1**

12.06.2025 **வா.சா.1 கண்ணன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

நான் மாட்டு வண்டி மூலம் மளிகை கடைகளுக்கு சரக்கு ஏற்றி, இறக்கும் வேலை செய்து வருகிறேன். ரவிக்கு வேறு ஏதும் பெயர் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்து வேறு பெயர் இல்லை. ரவி உப்பு மண்டி வைத்து தொழில் செய்து வந்தார். ரவி குடும்பத்தார் அனைவரும் அந்த தொழிலில் அவருக்கு உதவியாக இருந்து வந்தார்கள். ரவிக்கு தினசரி வருமானம் எவ்வளவு வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரவிக்கு நான் சொல்வது போல் இவ்வளவு அதிகமான தொகையை கொடுத்திருப்ப வாய்ப்பில்லை என்றும், ரவியின் உப்பு மண்டிக்கு நான் அடிக்கடி செல்வது வழக்கம் என்றும், அவ்வாறு செல்லும் சமயத்தில் அவர் கடையில் இருந்த புரோ நோட்டை எடுத்து வந்து அவரைப் போலவே கையொப்பம் போட்டு இந்த வழக்கு புரோ நோட்டை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ரவி காலமான பிறகு 2021 மே மாதம் ரவி நடத்தி வந்த உப்பு மண்டிக்கு நான் சென்று ரவி என்னிடம் ரூ. 2 லட்சம் வாங்கியிருக்கிறார் அதனை திருப்பி கொடுங்கள் என்று ரவியின் குடும்பத்தாரிடம் நான் கேட்டேன் என்றால் சரியல்ல. பிறகு ரவி மனைவியிடமும், அவரது பிள்ளைகளிடமும் ரூ. 2 லட்சம் அதற்கு வட்டியாக ரூ. 1 லட்சம் சேர்ந்து ரூ. 3 லட்சம் கொடுக்குமாறு கேட்டேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கவில்லை என்றால் அவரது குடும்பத்தினரை கொலை செய்து விடுவதாக நான் மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் அடியாட்களுடன் சென்று ரவியின் குடும்பத்தாரை கொலை மிரட்டல் செய்ததால் அவர்கள் உயிருக்கு பயந்து கொண்டு அவர்கள் வெளியூரில் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 17.06.2021க்கு பிறகு தான் தங்களை தைரியப்படுத்திக் கொண்டு சொந்த ஊருக்கு திரும்பி வந்தார்கள் என்றால் சரியல்ல. ரவி பெயரில் உள்ள சொத்தை எனது பெயருக்கு எழுதி வைக்கச் சொல்லி பிரதிவாதிகளை நான் அச்சுறுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அவர்களை கொலை செய்யவும் துணிந்தேன் என்றால் சரியல்ல. 15.12.2021 அன்று திருவண்ணாமலை காவல் துறை கண்காணிப்பாளரிடம் என் மீது பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். பிரதிவாதிகள் கொடுத்த புகாரில் ரவி யார் யாரிடம் கடன் பெற்றார் என்ற விவரப் பட்டியலை காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கொடுத்த பட்டியல் படி ரவி எனக்கு ரூ. 2 லட்சம் தான் கொடுக்க வேண்டும் என

குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதிகப்படியான தொகையை புரோ நோட்டில் எனக்கு வேண்டப்பட்ட நபர்களின் துணையுடன் பூர்த்தி செய்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 முதல் 3 ஒரே நேரத்தில் எழுதப்பட்டவை என்றால் சரியல்ல. பாண்டு எழுதுவதற்கு அங்கிகரிக்கப்பட்ட நபரால் பாண்டு எழுதுப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 ல் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு வரும் ஒவ்வொரு முறையும் பாண்டில் சாட்சி கையொப்பம் போட்டவர்களும் என்னுடன் வருகிறார்கள் என்றால் சரியல்ல. பாண்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள குமார் என்பவர் என்னைப் போலவே பிரதிவாதிகள் மீது ஒரு வழக்கு போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மற்றும் சாட்சி கையொப்பம் போட்ட அனைவரும் சேர்ந்து அதிகப்படியான தொகையை பிரதிவாதிகளிடம் இருந்து பறிக்க வேண்டும் என்ற நோக்கில் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.